திரு. எம். சீரங்கன் : அந்தப் பகுதியில் இப்படிப்பட்ட நிலைமையைப் போக்க கவனம் செலுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் குடிதண்ணீர் இல்லாதிருக்கின்ற இடங்களும் பல இருக்கின்றன என்ற தகவலைத் தந்திருக்கின்றார்கள். எந்தெந்த இடங்கள் என்று அவர்கள் தனியாகத் தெரிவிப்பார்களேயானால் அந்தந்த இடங்களில் குடிதண்ணீர் வசதி செய்வதற்கு இந்த அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாமக்கல் வட்டத்தைப் பிரித்தல்.

112.—(*வினா எண். 1541)—மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) நாமக்கல் வட்டத்தை, நாமக்கல் வட்டம், பரமத்தி-வேலூர் வட்டம் மற்றும் கொல்லிமலை வட்டம் என மூன்று வட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகரத்தில் நாமக்கல் வட்டாட்சியர் அலுவலகம் ஒன்று இருக்கிறது. நாமக்கல் நகரத்திலே கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. கூடுதல் வட்டாட்சியர் அலுவலகம் பரமத்தி—வேலூர் வருவாய்த் துறை எல்லைக்குட்பட்ட பணிகளை கூடுதல் வட்டாட்சியர் அவர்கள் செய்து வருகின்றார்கள். சேடர்பாளையம், சோழசிராமணி, அந்தப் பகுதியிலிருந்து, ஏறத்தாழ 30 மைல்களுக்கு அப்பால் இருந்து மக்கள் குறைகளைக் கொடுப்பதற்கு வருகின்றார்கள். அந்த அலுவலகத்தை பரமத்தி வேலூருக்கு மாற்றுகின்ற திட்டம் இருக்கிறதா ? அந்த வட்டத்தை 'ஃபுல்-பிளட்ஜ்ட்' அலுவலகம் என்று அறிவிக்க அரசிடம் ஏதாவது கொள்கை இருக்கிறதா ன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள நாமக்கல் வட்டம் மற்றும் ராசிபுரம் வட்டம் ஆகிய இரு வட்டங்களை சீரமைத்து, பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை ஆகிய வட்டங்களை உருவாக்குவது குறித்த கருத்து அரசின் ஆய்வில் உள்ளது. அடுத்த கேள்வி வரத் தேவையில்லை என்ற அடிப்படையில் விளக்கமாகவும் தெரிவித்து விடுகிறேன். சேலம் மாவட்டத்தில், நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைப் பிரித்து பரமத்தி வேலூர் மற்றும் கொல்லிமலை வட்டங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு 1978ஆம் ஆண்டிலேயிருந்து அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது. இந்தத் திட்டத்தை 1979 ஆம் ஆண்டிலேயே அரசு ஒப்புக்கொண்டாலும் இக்கருத்து நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. புதிய பரமத்தி வேலூர் வட்டத்தில் தலைமையிடத்தை எங்கு நிறுவுவது என்பது பற்றியும், புதிய வட்டங்களை ஏற்படுத்தவேண்டிய பணிஇடங்கள் இன்ன பிறவற்றை ஆய்வு செய்யாமலேயே வட்டங்களைப் பிரிப்பது குறித்து மட்டும் முடிவு எடுக்கப்பட்டமையாலும் பின்னர் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்தல்கள் காரணமாகவும், இடங்களைப் பிரிப்பது தொடர்பான ஆணைகளை வெளியிடமுடியவில்லை. ஆயினும் இப்போது வட்டங்களின் பிரிவினை குறித்தும், புதிய வட்டங்கள் தலைமையிடங்கள் எவை என்பது குறித்தும் மக்கள் கருத்தறிய மாவட்ட அரசுகளின் சரியான அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதற்கு மக்களிடம் இருந்து மறுப்பு ஏதும் இல்லை. அவ்வறிக்கையின்படி பரமத்தி வேலூர் தலைமையிடமாகக் கொண்டு பரமத்தி வேலூர் வட்டமும் மற்றும் வாழவந்திநாட்டை தலைமை இடமாகக் கொண்டு கொல்லிமலை வட்டமும் அமையும். 18 வயது பூர்த்தியானவர்கள் அனைவரையும் வாக்காளர் பட்டியலிலே சேர்க்கும் பணி காரணமாக மாவட்டங்கள், வட்டங்கள் பிரிவினை செய்ய பொதுத் (தேர்தல்) துறை தடை ஆணை பிறப்பித்துள்ளதால் அரசு செயற்குறிப்பினை நிலுவையில் வைத்துள்ளது. இத்தடை ஆணை விலக்கப்பட்டதும் மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். I hope I have answered your question properly and completely.

நாகல்குளம் — ஆலங்குளம் கால்வாய்.

113—(*வினா எண் 193)— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, நாகல்குளத்திலருந்து ஆலங்குளம் வரை உள்ள கால்வாயில் தண்ணீர் வரும்போது சில பகுதிகளில் தண்ணீர் தேங்கி கரை உடைந்து சேதம் ஏற்படுத்துவது அரசுக்குத் தெரியுமா ?